DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.

Case No:**S.C.No.54/2025**

Prosecution Witness P.W.8

Name : **திரு.முத்துமணி** Caste:

Father's Name :**திரு.** Calling :

Village: Religion :

Taluk : Age:

எதிரிகள் ஆஜர்

**நாள்: 10.02.2026.**

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது அப்பிபட்டி என்ற அழகாபுரி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நான் உப்புக்கோட்டை கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 11.10.2024 ஆம் தேதியன்று எனது சொந்த ஊர் கூடலூர். கூடலூரிலிருந்து – சின்னமனூர் இறங்கி எனது இருசக்கர வாகனத்தை எடுத்துக் கொண்டுதான் நான் உப்பு கோட்டை கிராமத்திற்கு செல்ல வேண்டும், அன்றைய தினம் காலை சுமார் 7:00 மணியளவில் சின்னமனூர் பேருந்து நிலையத்தில் நான் நிற்கும்போது சின்னமனூர் காவல் ஆய்வாளர் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு உப்புக்கோட்டை கிராமத்தில் ஒரு குற்ற வழக்கு சம்பந்தமாக அத்தாட்சி கைப்பற்ற வேண்டுமென்றும், அது சம்பந்தமாக உப்புக்கோட்டை கிராமம் முல்லைப் பெரியாறு ஆற்றுப்பக்கம் வருமாறு என்னை அழைத்தார்கள்.

2. அப்போது என்னுடன் இருந்த எனது நண்பர் முனியப்பன் என்பவரும், நானும் உப்புக்கோட்டை கிராமத்திற்கு காலை 8.00 மணியளவில் சென்றோம். அப்பொழுது முல்லைப் பெரியாற்றின் கரை அருகில் காவல் ஆய்வாளருடன் சென்றபோது அங்கே இருந்தார். சதீஷ்குமார், சுருளியப்பன், தீபக் ராஜா ஆகிய

மூவரும் எங்கள் முன்னிலையில் போலீசார் கைது செய்தார்கள். அவ்வாறு கைது செய்யும்போது காலை சுமார் 8.15 மணி இருக்கும். சதீஷ்குமார் போலீசார் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் தானாக முன்வந்து கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்தேன்.

3. அதன் பிறகு சதீஷ்குமார் தான் கொலை வழக்கில் பயன்படுத்திய இருசக்கர வாகனத்தையும், மொபைல் போனையும் அத்தாட்சியாக கொடுத்தார். 09.43 மணியளவில் சுருளியப்பன் என்பவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்கு மூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்தேன். பின்னர் காலை 10:40 மணியளவில் சதீஷ்குமார் என்பவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்தேன்.

4. பின்னர் சதீஷ்குமார் என்பவர் கொலைக்கு பயன்படுத்தி ஆயுதத்தை மறைத்து வைத்திருந்த இடத்தையும் காண்பிப்பதாக கூறி என்னையும், காவல்துறை அலுவலர்களையும் குண்டல் நாயக்கன்பட்டி ரோடு அருகேயுள்ள மேற்கு பக்கம் உள்ள கரும்பு தோட்டத்தின் அருகே மறைத்து வைக்கப்பட்டிருந்த கத்தியை 12:30 மணியளவில் அத்தாட்சியாக ஒப்படைத்தார். 1.00 மணி அளவில் சுருளியப்பன் என்பவர் மறைத்து வைத்திருந்த ஆயுதமான கத்தியை எடுத்து ஒப்படைத்தார் அந்த கத்தியானது கரும்பு தோட்டத்திலிருந்து அந்த கத்தி எடுத்து ஒப்படைத்தார், ரோட்டோரம் உள்ள வரப்பு மீது அந்த கத்தி வைக்கப்பட்டிருந்தது, அந்த கத்தியை எடுத்து ஒப்படைத்தார். பின்பு சுமார் 2.00 மணியளவில் அத்தாட்சி வாக்குமூலம் பெறப்பட்டு அத்தாட்சி வாக்குமூலம் தயார் செய்து கையெழுத்து வாங்கினார்கள்.

5. பின்னர் சுமார் 03.00 மணியளவில் டொம்புச்சேரி செல்லும் வழியில் குடிநீர் தொட்டி அருகில் முருகன் என்பவர் மறைந்திருந்ததை கண்டுபிடித்து அவரை போலீசார் கைது செய்தார்கள். அவர் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் அத்தாட்சியில் கையொப்பம்

செய்தேன். அவரிடமிருந்து இரண்டு செல்போன்கள் கைப்பற்றப்பட்டது. 3–ம் எதிரி முருகன் என்பவரது ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அவர்கள் கையெழுத்து மற்றும் சாட்சிகளின் கையொப்பம் அ.சா.ஆ.12, 4 ஆம் எதிரி சதீஷ்குமார் அவர்கள் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அவர் கையெழுத்து மற்றும் எங்களது கையெழுத்துக்கள் அ.சா.ஆ. 13, 5–ம் எதிரி சுருளிராஜ் என்பவர் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து மற்றும் சாட்சிகளின் கையொப்பம் அ.சா.ஆ.14, 6ம் எதிரி வாக்குமூலத்தில் உள்ள அவர் கையெழுத்து அ.சா.ஆ.15, கைப்பற்றுதல் மகஜர்கள் அ.சா.ஆ.16, 17, 18, 19 மற்றும் 20, அந்த மூன்று கத்திகளும் வரப்பின் மீது பக்கத்தில் வைக்கப்பட்டிருந்தது, அவற்றை கைப்பற்றினார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். என்னிடம் காண்பிக்க கூடிய மூன்று கத்திகள் அவ்வாறு கைப்பற்றப்பட்ட கத்திகள் அவை கத்தி சா.பொ. 6, 7 மற்றும் 8. எதிரி சதீஷ்குமார் கொடுத்த கருப்பு நிற மொபைல் போன் சா.பொ.9, மற்ற இரண்டு செல்போன்கள் எதிரி முருகன் கொடுத்தது அது சா.பொ.10 மற்றும் 11. ஆய்வாளர் என்னை வழக்கு தொடர்பாக விசாரணை செய்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நீதிமன்றத்தில் காண்பிக்க கூடிய கத்தியானது யாரிடம் எங்கு வைத்து எப்போது கைப்பற்றப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, தெரியும். இந்த மூன்று கத்திகளில் யார் யார் எந்த கத்தியை எடுத்து போலீசாரிடம் ஒப்படைத்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் என்னிடம் கடிதம் எதுவும் கொடுத்து சாட்சியாக என்னை அழைக்கவில்லை இந்த கொலை வழக்கில் நான் சாட்சியாக செல்கிறேன் என்ற விவரத்தை எனது மேலதிகாரிக்கு நான் எடுத்துப் மூலமாக தெரிவித்தேன் என்றால் வாய்மொழியாக மட்டுமே தெரிவித்தேன்.

2. அவ்வாறு வாய்மொழியாக எனது உயரதிகாரிக்கு தகவல் தெரிவித்தேன் என்ற விவரத்தை போலீசார் என்னை விசாரிக்கும் போது சொல்லவில்லை

என்றால் சரிதான், ஒப்புதல் கடிதம் இல்லாமல் கொலை வழக்கில் நான் சாட்சியாக செல்ல முடியாது என்றோம் வழக்கிற்காக வாய்மொழியாக தகவல் தெரிவித்ததாக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. நான் சின்னமனூருக்கு காலை 7 மணிக்கு சென்றேன். உப்பு கோட்டைக்கு காலை 8 மணிக்கு சென்றேன். நான் அங்கு செல்லும்பொழுது எதிரியை போலீசார் கைது செய்தார்களா என்றால் 08.15 மணிக்கு போலீசார் கைது செய்தார்கள். நாங்கள் முல்லைப் பெரியாற்று கரைக்குச் சென்ற பொழுது எதிரிகள் அங்கு நின்று கொண்டிருந்தார்கள் அங்கு சென்றவுடன் போலீசார் அவர்களை கைது செய்தார்கள். மூன்று பேரும் ஒரே இடத்தில் தான் நின்று கொண்டு இருந்தார்கள் அவர்களை போலீசார் அங்கு கைது செய்தார்கள்.

3. நான் வழக்குக்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றும், மூன்று பேரும் அவ்வாறு அங்கு இல்லை என்றால் சரியல்ல அந்த இடத்தைச் சுற்றி நிறைய தோட்டங்கள் அமைந்துள்ளது என்றால் சரிதான். வயல்வெளி மற்றும் தோட்டம் அமைந்துள்ளது அந்த வயல்வெளியில் வேலை செய்வதற்கு ஆட்கள் நிறைய பேர் நடமாட்டம் இருந்ததென்றால் அதிகாலை என்பதால் அந்த சமயம் யாரும் கிடையாது. நான் 8.15 மணிக்கு அங்கு விசாரணைக்கு சென்றேன். எதிரி சதீஷ்குமார் வாக்குமூலம் சொல்ல சொல்ல காவலரால் அந்த வாக்குமூலம் எழுதப்பட்டது. அவ்வாறு அந்த வாக்குமூலத்தை எழுதிய காவலர் யார் என்று விவரம் எனக்கு சரியாக தெரியாது. சதீஷ்குமார் எத்தனை பக்கங்களில் வாக்குமூலம் கொடுத்தார், எத்தனை பக்கங்களில் அவர் கையெழுத்து போட்டார் என்ற விபரம் எனக்கு சரியாக தெரியாது என்றால் சரிதான்.

4. அந்த வாக்குமூலமானது சுமார் முக்கால் மணி நேரம் கொடுக்கப்பட்டது. சதீஷ்குமார் இடமிருந்து அத்தாட்சியாக பைக் மற்றும் செல்போன் கைப்பற்றப்பட்டது அந்த செல்போன் ஆனது ஓப்போ செல் போன். அந்தக் கைப்பற்றுதல் செல்போன் ஆனது என்ன மாடல் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு அந்த மாடல் தெரியாதுநான் கையெழுத்து போட்ட

அத்தாட்சியில் செல்போனின் கவர் என்ன நிறம் என்ற விபரத்தை குறிப்பிட்டுச் சொல்லி உள்ளார்களா என்றால் எனக்கு அதைப் பற்றி தெரியாது நான் கையெழுத்திட்ட அத்தாட்சியில் அலுவலகத்திற்கான முத்திரைகளை நான் போடவில்லை என்றால் சரிதான்.

5. நான் உண்மையிலேயே சம்பவத்திற்கு சென்று அத்தாட்சி தயார் செய்யும்போது கையெழுத்து போட்டு இருந்தால் எனது அலுவலகத்திலிருந்து எனது முத்திரையை எடுத்துச் சென்றிருப்பேன் என்றால் சரியல்ல. அவர்களிடம் கைப்பற்றப்பட்ட மொபைல் போனில் சிம் கார்டு இருந்ததா என்ற விவரம் எனக்கு தெரியாது அத்தாட்சியில் சிம் சம்பந்தமாக ஏதேனும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு எதுவும் குறிக்கவில்லை. அந்த செல்போனாது ஆனது ON– ஆகி இருந்ததா அல்லது சுவிட்ச் ஆப் செய்யப்பட்டு இருந்ததா என்ற விவரம் எனக்கு தெரியாது. எங்களுடன் சுமார் நான்கு போலீசார் விசாரணைக்கு வந்தார்கள். ஆய்வாளர் மற்றும் 3 போலீசார் வந்தார்கள்.

6. அத்தாட்சி அளவுகோல் வைத்து அளந்து தாக்கல் செய்யப்பட்டதா என்ற விபரம் எனக்கு தெரியாது. அத்தாட்சி சீல் வைத்து கைப்பற்றப்பட்டதா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். உண்மையிலேயே எங்கள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்திருந்தால் அதை அளந்து சீல் வைத்து கையெழுத்து போட்டு இருப்போம் என்றால் சரியல்ல. என்ன வகையான கத்தி என்று அத்தாட்சியில் எழுதப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது. எந்தெந்த கத்தி நீளம், அகலம் என்ன என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றிய விவரம் எனக்கு தெரியாது.

7. அந்த கரும்பு தோட்டத்தின் முகவரி என்ன என்ற விவரம் நான் விசாரணை செய்து தெரிந்து கொண்டேனா என்றால் அந்த வரப்பானது அரசு பட்டா நிலம் கிடையாது, புறம்போக்கு நிலம். அந்த விபரத்தை நான் ஆய்வாளர் என்னை விசாரிக்கும் பொழுது குறிப்பிட்டுச் சொல்லியுள்ளேனா என்றால் அது பற்றி நான் குறிப்பிடவில்லை. கரும்பு தோட்டத்திற்குள் நான் எந்த கத்தியையும்

கைப்பற்றி பார்க்கவில்லை என்றால் கரும்பு தோட்டம் மற்றும் புறம்போக்கு இரண்டும் ஒன்றாகத்தான் உள்ளது கரும்பு தோட்டத்திற்குள் வீசும் போது அந்த தோட்டத்தில் உள்ள மண்துகள்களும் அங்கு இருந்த கரும்பின் தோகைகளும் அந்த கத்தியில் ஒட்டுவதற்கான கத்தியில் ஒட்டுவதற்கான வாய்ப்புகள் உள்ளது என்றால் தூக்கி வீசினால் ஒட்டுவதற்கு வாய்ப்பு உண்டு, வேண்டுமென்றே கீழே வைத்தால் ஒட்டுவதற்கு வாய்ப்பு இல்லை.

8. ஒப்புதல் வாக்குமூலத்தில் கத்தியை வைத்ததாகத்தான் என்னிடம் சொல்லி உள்ளார்கள் நான் வழக்குக்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல கைப்பற்றப்பட்ட கத்தியில் மண் துகள்கள் எதுவும் ஒட்டவில்லை என்றால் சரிதான். கத்தி கைப்பற்றும்போது கைரேகை நிபுணர்கள் யாரையும் போலீசார் அழைத்து வரவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட கத்திகள் எந்த திசையில் எந்த கத்தி இருந்தது என்ற விவரத்தை நான் போலீசார் விசாரணையில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். பொதுவாக கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் ஒரு டைரி பராமரிப்பது வழக்கம் என்றால் அவ்வாறு டைரி ஏதும் பராமரிப்பது கிடையாது.

9. நான் எங்கு செல்ல வேண்டுமோ அது சம்பந்தமான விபரங்களை டைரியில் குறிப்பது வழக்கம் என்றால் சரியல்ல. அந்தப் பகுதியில் எப்பொழுதும் ஆண்களும், பெண்களும் நடைபயிற்சிக்கு செல்வது வழக்கம் என்றால் சரிதான். 3–ம் எதிரியை கைது செய்யும்போது அவர் தண்ணீர் தொட்டி அமைந்துள்ள ரோட்டுக்கு பின்புறம் நின்று கொண்டிருந்தார் அதைப்பற்றி விவரத்தை நான் போலீசார் விசாரணையில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்தப் பகுதி ஊர் பொதுமக்கள் அதிகம் புலங்கும் பகுதி என்றால் சரியல்ல. அது ஊருக்கு வெளியில் அமைந்துள்ளது.

10. தோட்டப்பகுதி என்றாலும் அங்கு ஆட்கள் வேலைக்கு செல்வார்கள் என்றால் சரிதான் கைப்பற்றப்பட்ட மொபைல் போன் என்ன கவர் போடப்பட்டிருந்தது அதில் என்ன சிம் இருந்தது என்ற விவரங்கள் எனக்கு

தெரியாது என்றால் சரிதான். ராஜ்குமார் என்ற நபரும் தீபக்ராஜா என்ற நபரும் வெவ்வேறு நபர்கள் என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்ட இருசக்கர வாகனத்தின் நிறம் மற்றும் அதன் எண் என்னவென்று எனக்கு சரியாக ஞாபகமில்லை. சுருளியப்பனை 9.45 மணிக்கு விசாரணை செய்தார்கள். சுமார் 45 நிமிடம் அவர் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்.

11. தீபக் ராஜாவை 10.45 மணிக்கு போலீசார் விசாரணை செய்தார்கள். அவர் ஒப்புதல் வாக்குமூலம் சொல்லச் சொல்ல போலீசார் எழுதி கையெழுத்து வாங்கினார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரிக்கு எதிராக இந்த ஒப்புதல் வாக்குமூலம் பயன்படுத்தப்படும் என்ற விவரம் அவரிடம் சொல்லப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு குறிப்பிடவில்லை. உண்மையிலேயே ஒப்புதல் வாக்குமூலம் அவர் சொன்ன வழியில் பதிவு செய்திருந்தால் அவர் சொல்ல சொல்ல வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. சுருளிராஜ் என்பவரை தான் போலீசார் விசாரணை செய்தார்கள், சுருளியப்பன் என்பவரை விசாரணை செய்யவில்லை. முதல் விசாரணையில் சொல்லி உள்ள சுருளியப்பன் என்பவர் வேறு என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும், யாரையும் விசாரணை செய்யவில்லை என்றும், அதனால் தான் தெரியவில்லை என்றால் சரியல்ல. அரசு ஊழியர் என்பதால் ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை – இல்லை**</u>

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.02.10 15:17:30 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.